## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2018)

# PSS 2222 Contemporary Political Theory
## (சமகால அரசியல் கோட்பாடு)

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி-I இல் இருந்து ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து ஏதேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) காலனித்துவம் என்பதற்கு விளக்கம் கூறி, காலனித்துவ உருவாக்கத்திற்குக் கையாளப்பட்ட பொறிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனித்துவ ஆட்சி எவ்வாறு முடிவிற்கு வந்தது என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ) காலனித்துவத்திலிருந்து நவகாலனித்துவத்தை வேறுபடுத்திக் காட்டுக.

(10 புள்ளிகள்)

(ஆ) 1990 களுக்குப் பின்னர் நவகாலனித்துவம் முடிவிற்கு வந்துவிட்டதாக நீர் கருதுகின்றீரா? உமது விடைக்கான தர்க்க ரீதியான விளக்கத்தைத் தருக.

(10 புள்ளிகள்)

03. (அ) டேவிட் ஈஸ்ரன் (David Easton) நடத்தைவாதம் தொடர்பாகக் கூறும் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சமூகக் கோட்பாட்டாளர்கள் கூறியுள்ள கருத்துக்கள் ஊடாகச் சிவில் சமூகம் என்ற பதத்திற்கு விளக்கம் தருக?

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. அரசிற்குரிய பண்புகளையும். இறைமையையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வெஸ்பாலிய (Westphalia-1648) உடன்படிக்கையின் விளைவுகளைப் பூகோளமயவாக்கம் சிதைத்து வருவதாகக் கூற முடியுமா?

(30 புள்ளிகள்)

05. "நல்லாட்சியை உருவாக்குவதில் உலக நாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றன" அரசு ஒன்று நல்லாட்சியை உருவாக்கிக்கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்களை மதிப்பீடு செய்க.

(30 புள்ளிகள்)

06. நல்லாட்சியை நிறுவுவதற்கு இலத்திரனியல் ஆட்சி எவ்வகையில் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை இலத்திரனியல் ஆட்சிப் பண்புகளை மையமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(30 புள்ளிகள்)

*****